செ.வெ.எண்:17 நாள்: 08.11.2019

<u>பத்திரிக்கைச் செய்தி</u>

<u>குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு தரச்சான்றுக்கான மான்யம் மற்றும் விருதுக்கு பதிவு செய்தல்</u>

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் சர்வதேச போட்டித்தன்மையினை மேம்படுத்தவும், உலகளாவிய சந்தையுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கு ஏதுவாக இந்நிறுவனங்கள் பெற்றுள்ள ISO 9000, ISO 14001, ISO 22000 , HACCP ,GMP,GHP,BIS,ZED உள்ளிட்ட சர்வதேச தரச்சான்றிதழ்கள் பெறுவதற்காக செலுத்தப்படும் கட்டணத்தில் ஒவ்வொரு சான்றிதழுக்கும் 100 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.1,00,000/–வரை மான்யமாக வழங்கும் பொருட்டு தமிழக அரசு Quality Certification (Q-CERT) என்ற புதிய திட்டத்தை 2019 ம் ஆண்டு முதல் செயல்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, கரூர் மாவட்டத்தில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மேற்குறிப்பிட்ட தரச்சான்றிதழ்களில் ஏதேனும் பெற்றிருந்தால் மான்யம் பெறுவதற்கான விழிப்புணர்வு முகாம் கரூர் மாவட்ட டெக்ஸ்டைல்ஸ் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியாளர்கள் சங்க வளாக கூட்டரங்கில் 13.11.2019 அன்று புதன்கிழமை மாலை 05.00 மணியளவில் நடைபெற உள்ளது.

மேலும் “ மாண்புமிகு தமிழக முதல்வரின் சிறப்பு தொழில் முனைவோருக்கான விருதுகள்” 2016–17,2017–18,2018–19 ஆகிய ஆண்டுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதால், கரூர் மாவட்டத்தில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் இவ்விருதுகள் பெறும் பொருட்டு இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்கும் வழிமுறைகள் தொடர்பாக விளக்கங்களும் மேற்படி விழிப்புணர்வு முகாமில் வழங்கப்படும்.

எனவே, கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களும் இம்முகாமில் கலந்துகொண்டு தரச்சான்றுக்கு மான்யம் பெறுதல் மற்றும் விருதுகளுக்கு விண்ணப்பிக்கும் வழிமுறைகளை தெரிந்துகொண்டு பயனடையுமாறு கரூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் கேட்டுக்கொள்கிறார்கள்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.